அசல் வழக்கு எண். **326/2018,** பி.வா.சா.**1,** உதயசூரியன் **,** த/பெ.சிவபிரகாசம்

தேதி 07.10.2025

<u>குறுக்கு விசாரணை</u> **:**

சிவபிரகாசம் எனது தகப்பனார் என்றால் சரிதான். அவர் நன்றாக உள்ளார் என்றால் இல்லை. நீதிமன்றத்திற்கு வந்து அவர் சாட்சி சொல்ல வரமுடியும் என்றால் முடியாது. ஒரு கண் தெரியாது. நான் பொய் சொல்கிறேன் என்றும் என் தகப்பனார் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதை தவிர்க்கும் நோக்கில் நான் வேண்டுமென்றே ஆரோக்கியம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட சர்வே எண் என்ன என்றால் 160/2 ஆகும். சர்வே எண்.160/2 இல் நிலவுடமை பதிவேட்டு திட்டத்தில் யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் பொண்ணுச்சாமி வகையறா பெயரில் பட்டா உள்ளது. பொண்ணுச்சாமியின் மகனின்களில் ஒருவர்தான் இந்த வழக்கின் வாதி என்றால் சரிதான். நிலவுடமை திட்டத்தில் பட்டா வழக்கப்பட்டு இருந்தால் அது சம்மந்தப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யும் மேல்முறையீட்டு அதிகாரம் மாவட்ட வருவாய் அலுவலருக்குதான் உள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் டி.ஆர்.ஓ க்கு மேல்முறையீடு செய்வதற்கான எவ்வித ஆவணத்தையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் , இல்லை. மாறாக வட்டாட்சியருக்குத்தான் பட்டா பெயர் மாற்றம் சம்மந்தமாக மனு கொடுத்தேன் என்றால் , எனது தகப்பனார்தான் அளித்தார். அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் உள்ளது. நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழான தவறினை சரி செய்யும் அதிகாரம் வருவாய் வட்டாட்சியருக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு நேரடியாக தெரிந்த விவரங்கள் எனக்கு தெரிய வாய்பில்லை என்றால் இல்லை தெரியும். எனது தகப்பனார் சொல்லியுள்ளார். வழக்கு சொத்து சம்மந்தமாக பட்டாவை தவிற வேறு பதிவு செய்யபட்ட உரிமை ஆவணங்கள் என்னிடம் இல்லை என்றால், சரிதான். வழக்கு சொத்து பூர்வீக சொத்து ஆகும். எனக்கு உண்மையில் செட்டில் மெண்ட் மூலம் பட்டா ஏற்பட்டு இருந்தாலும் தொடர்ச்சியாக சுவாதீனத்திலும் இருந்து வந்திருந்தால் யூ.டி.ஆர் திட்டத்தின்போது ஆட்சேபனை செய்திருப்பார் என்றால், சரியல்ல. யூ.டி.ஆர் திட்டம் வந்தபோது எனது தகப்பனார் தாவா கிராமத்தில்தான் இருந்தார் என்றால், சரிதான். சர்வே எண். 160/2 என்பது பழைய புல எண் ஆகும். சர்வே எண். 160/2 என்பது 160/2A,160/2B, 160/2C எப்போது உட்பிரிவு

ஆனது என்றால் 1995 ஆம் வருடம் ஆனது. எனது தகப்பனார் வட்டாட்சியரிடம் கொடுத்த மனுவிற்கு வாதியின் குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு சட்டப்படி அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. நான் அவ்வாறு எவ்வித அறிவிப்பும் அனுப்பாததால்தான் எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. வாதிக்கும் அவரது குடும்பத்தார்களுக்கும் முறையான அறிவிப்பு கொடுக்காமல் வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு தவறு என்று சொன்னால், சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )